# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 14வயது பிரிவு

- தேவார மனனப்போட்டி.

பண் : நட்டராகம்

**விருது குன்றமா மேருவில் நாணர வாஅனல் எரிஅம்பாப்**
**பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்**
**கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்**
**கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.**

பொழிப்புரை:

வெற்றிக்கு அடையாளமாக, பெரிய மேரு மலையை வில்லாகக் கொண்டு அரவை நாணாகப்பூட்டி அனல் எரியை அம்பாகக் கொண்டு பொருது முப்புரங்களை எரித்த சிவ பிரான் பற்றிநின்று உறையும் பதியாக அடியவர் எந்நாளும் கருதுகின்ற ஊர், ஆரவாரிக்கின்ற கடலால் சூழப்பட்ட, மணம் கமழும் பொழில்கள் அணிசெய்யும் மாதோட்டத்தில் பலரும் கருதி வழிபாடு செய்யாநின்ற திருக்கேதீச்சரமாகும். அதனைக் கைதொழின் கடுவினைகள் நம்மை அடையா.

பண் : தக்கேசி

**பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்**
**மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க் கருள்செய்தார்**
**தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் னிரையோடும்**
**ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணா மலையாரே.**

பொழிப்புரை:

நீர்த்துளிகளைத் தூவும் கரிய மேகங்கள் வானத்தில் நின்றவாறு இடி முழக்கத்தைச்செய்ய, அதனைக் கேட்டு அஞ்சிய காட்டுப் பசுக்களின் மந்தைகளான வரிசைகள் வந்து ஒருங்கிணையும் அடிவாரத்தை உடைய திருவண்ணாமலை இறைவர், அடியவர்கள் பொலிவுமிக்க நறுமலர்களைத் தூவி வழிபடவும், வானோர்கள் புகழ்ந்து போற்றவும், அழியாவரம் பெற்ற அசுரர்களின் முப்புரங்களை எரித்து அழித்து அவ்வசுரர்களில் மூவர்க்கு அருளையும் வழங்கிய பெருமையுடையவர்.
எனக்கு ஆளில்லை˙ அடியேன், எஞ்ஞான்றும் உன்னையே நினைத்து நாள்தோறும் வணங்குந் தொழிலை உடையேன்˙ வேறு யாரை வேண்டுவேன்! அவைகளை அங்குச் சேர்ப்பித்து உதவ, நீ, எவர்க்கேனும் கட்டளையிட்டருள்.

- திருவாசக மனனப்போட்டி.

**போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே**
**புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்**
**டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்**
**எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்**
**சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்**
**திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே**
**ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.**

பொழிப்புரை:

என் வாழ்வுக்குத் தாரகமாகிய பொருளே! சேற்றினிடத்து இதழ்களையுடைய தாமரை மலர்கள் மலர்கின்ற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபிரானே! உயர்ந்த இடபக் கொடியை உடையவனே! என்னை அடிமையாக உடையவனே! எம் தலைவனே! வணக்கம். பொழுது விடிந்தது தாமரை போலும் திருவடிகளுக்கு ஒப்பாக இரண்டு மலர் களைக் கொண்டு சாத்தி அதன் பயனாக உன்னுடைய திருமுகத்தில் எங்களுக்கு அருளோடு மலர்கின்ற அழகிய நகையினைக் கண்டு உன் திருவடியைத் தொழுவோம் பள்ளி எழுந்தருள்வாயாக.

**அரிக்கும் பிரமற்கும்**
**அல்லாத தேவர்கட்குந்**
**தெரிக்கும் படித்தன்றி**
**நின்றசிவம் வந்துநம்மை**
**உருக்கும் பணிகொள்ளும்**
**என்பதுகேட் டுலகமெல்லாஞ்**
**சிரிக்குந் திறம்பாடித்**
**தெள்ளேணங் கொட்டாமோ**

.

பொழிப்புரை:

திருமால் பிரமன் முதலியோர்க்கும் இன்னபடி யென்று தெரிவிக்கலாகாமல் நின்ற பரமசிவமே எழுந்தருளி நம்மை மனமுருகப் பண்ணி ஆண்டுகொள்ளும் என்னும் செய்தியைக் கேட்டு உலகத்தாரெல்லாரும் நகைக்கும் விதத்தைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

- திருமந்திர மனனப்போட்டி.

**உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை**
**உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை**

**உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனை உருவறி யாதே .**

பொழிப்புரை:

சிவன், ஆன்ம அறிவேயாயும், அவ்வறிவுக்கு அறிவாயும், அதனில் சிறிதும் பிரிவின்றியும் அதனோடு யாண்டும் உடனாயே நிற்பினும் அவ்வறிவு மல மறைப்பால் அவனது இருப்பை அறியமாட்டது.

**தவம்செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்**
**சிவன்றன் விரதமே, சித்தாந்தக் கேள்வி,**
**மகம்சிவ பூசைஒண் மதிசொல் ஈரைந்து**
**நிவம்பல செய்யின் நியமத்த னாமே.**

பொழிப்புரை:

தவம் முதலாக மதி ஈறாகச் சொல்லப்பட்ட பத்தினையும் நியமமாகக் கொண்டவன் நியம யோகியாவான்.

- **திருக்குறல்** **ஆறாம் அதிகாரம்**
- **பேச்சுப்போட்டி** **"அன்பே சிவம்"** சுயதேடல்.

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

**உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.**